**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, SENDAMANGALAM.**

**O.S.No.661/2020** **P.W.2**

Deposition of witness for solemnly affirmed by Tmt.S.Sangeetha, Assistant of this court on 27.01.2026 in accordance with the provision of the Act 1873.

| | |
|---|---|
| Name: | பெருமாள் |
| Father Name: | கருப்பமுத்துராஜா |
| Age: | 75 |
| Address: | கஸ்தூரிப்பட்டி, சேந்தமங்கலம் வட்டம் |
| District: | நாமக்கல் மாவட்டம் |
| Religion: | இந்து |

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 3ம் நபர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாணப்பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் அதை படித்துப் பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது தகப்பனார் பெயர் கருப்பழகி முத்துராஜாவா அல்லது கருப்பமுத்துராஜாவா என்றால், கருப்பமுத்துராஜா ஆவார். வாதிக்கும், எனக்கும் என்ன உறவுமுறை என்றால் வாதி எனது உடன்பிறந்த தங்கை ஆவார். இவ்வழக்கு தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்று தெரியுமா என்றால், தெரியாது. வழக்கு தாவாசொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை. இவ்வழக்கின் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் நீதிமன்றத்தில் வந்து சாட்சியமளிக்க அழைத்ததன் பேரில் வழக்கறிஞர் தட்டச்சு செய்து வைத்திருந்த எனது பிரமாண பத்திரிக்கையில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல படித்து காண்பித்த பின்னர்தான் கையொப்பம் செய்தேன்.

இவ்வழக்கு தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், எனது தங்கை வாதி கிரையம் பெற்ற சொத்தாகும். வாதி கிரையம் பெற்றவருக்கு மேற்படி சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால், தெரியாது. வாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற பத்திரம் பதிவாகியுள்ளதா என்றால் எருமப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ளது. இவ்வழக்கு தாவா சொத்து அரசுக்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்து எருமப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகியுள்ளது என்று எனது தங்கைக்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யும் சமயத்தில் நான் அலுவலகத்திற்கு சென்று நான் கையெழுத்து செய்தேனா என்றால் கையெழுத்து செய்தேன். மேற்படி பத்திரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவாகவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

Sd/E.Ridhula
DM,SDM.

Sd/Perumal(PW2)